**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-06022021-4415

Volume: 6

Issue: 2

Month: October

Year: 2021

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 22.08.2021

Accepted: 27.09.2021

Published: 01.10.2021

Citation:
Mangaiyarkkarasi, G. "Obsolete Worship." *Shanlax International Journal of Tamil Research,* vol. 6, no. 2, 2021, pp. 86–94.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i2.4415

*Corresponding Author:
gmangaichennai@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Obsolete Worship

**Dr. G. Mangaiyarkkarasi**
*Assistant Professor, Department of Tamil*
*A.M.Jain College, Meenambakkam,Chennai, Tamil Nadu, India*
http://orcid.org/0000-0002-0895-0460

**Abstract** - Man, who at first feared the power of nature, worshiped nature so as not to succumb to its wrath. He worshiped many deities such as nature worship, tree worship, Murugan worship, Shiva worship. Worship of Indra, Varuna, Kaman, Brahman, Balarama and Nadukal, which were once worshiped as special deities, are not in use today.

**Keywords:** Inderan vazhalibadu, Varunan vazhaalibadu, Kaaman vazhalibadu, Biramman vazhalibadu, Balaraman vazhalibadu, Nadukal vazhibadu.

## References

1. Ilampuraner urai. *Tholkappiyam - porulathikaram*, thirunelveli thennnthiya saliva (1953). Chennai, Sithdantha nurpathippuk kazhagam limited.
2. Kamalakannan, Ir. Va. (2001). *Naalayira Divya Prabhandam mulamum uraiyum thuguthi 1*, Chennai, Varthamanan Pathippagam.
3. Subramaniyam, Pa. & Darsinamurthi. (2004). *A paribadal mulamam uraiyum*. Chennai, new sensuri book house private limited.
4. Nagarajan. V. (2004). *Pathuppattu mulamam uraiyum*. Chennai, new sensuri book house private Limited.
5. Balasubramanian. Ku.Vai. (2004). *Natrinai mulamam uraiyum*. Chennai, new sensuri book house Private limited Chennai.
6. Balasubramanian. Ku.Vai... (2004). *Purananuru mulamam uraiyum*. Chennai, new sensuri book house private limited.
7. (1963). Chennai. Perunkathai thirunelveli thennnthiya saliva sithdantha nuepathippuk kazhagam Limited.
8. Visvanathan. (2004). *A kaliththogai mulamum uraiyum*. Chennai, new sensuri book house private Limited.
9. Sri chandiran, J. (2012). *Silappathiharam mulamum thelivuraiyum*. Chennai, Tamil nilayam,
10. Sri chandiran. (2007). *Pathinenkizhailkanakku nulgal thoguthi 1,2,3*. Chennai, Tamil nilayam.
11. Sri chandiran. (2012). *Manimehalai mulamum uraiyum*. Chennai, Tamil nilayam.

# வழக்கொழிந்த இறை வழிபாடுகள்

*முனைவர் க. மங்கையர்க்கரசி*
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
அகர்சந்த்மான்மல் ஜெயின் கல்லூரி, மீனம்பாக்கம், சென்னை, தமிழ்நாடு, இந்தியா

***ஆய்வுச் சுருக்கம்***
*இயற்கையின் ஆற்றலைக் கண்டு அஞ்சிய மனிதன் அதன் சீற்றத்திற்குஆளாகாமல் இருக்க இயற்கையை வழிபட்டான். இயற்கை வழிபாடு, மரவழிபாடு, முருகன் வழிபாடு, சிவன் வழிபாடு என்று பல தெய்வங்களை வணங்கினான். ஒரு காலத்தில் சிறப்பான இறைவழிபாடுகளாகப் போற்றி வழிபடப்பட்ட இந்திரன் வழிபாடு, வருணன் வழிபாடு, காமன் வழிபாடு, பிரம்மன் வழிபாடு, பலராமன் வழிபாடு, நடுகல் வழிபாடுஆகிய வழிபாடுகள் இன்று வழக்கில் இல்லை.*

***முக்கியச்சொற்கள்:*** *சங்க இலக்கியம், இந்திரன், வருணன், காமன், பிரம்மன், பலராமன், நடுகல் வழிபாடு, இறை வழிபாடு*

## முன்னுரை

தமிழ் இலக்கியங்களில் இயற்கை வழிபாடு, மர வழிபாடு, முருகன் வழிபாடு, சிவன் வழிபாடு, திருமால் வழிபாடு, இந்திரன் வழிபாடு, வருணன் வழிபாடு, கொற்றவை வழிபாடு, காமன் வழிபாடு, கார்த்திகை தீப வழிபாடு, நவக்கிரக வழிபாடு, நடுகல் வழிபாடு, சூரியன் வழிபாடு, சமணக்கடவுள் வழிபாடு, புத்தக்கடவுள் வழிபாடு, நாக வழிபாடு, பிரம்மன் வழிபாடு, பலராமர் வழிபாடு, கஜலெட்சுமி வழிபாடு, விநாயகர்வழிபாடு (ஞானசம்பந்தர் காலம்) என்று பல வழிபாடுகள் இருந்தன.

## வழிபாடு

'வழிபாடு' என்ற சொல்லுக்கு "இறை காட்டிய அறவழியில் செல்லுதல்" என்பதே பொருளாகும். "வழிபடு" என்ற சொல்லிலிருந்து பிறந்ததே "வழிபாடு" என்ற சொல்லாகும். வழிபடு என்பதற்கு "வணக்கம்" என்று "செந்தமிழ் அகராதி" பொருள் கூறுகிறது. வழிபாடு என்ற சொல்லுக்கு அப்பியாசம், ஆராதனை, தாழ்மை, வணக்கம், வழிபடல் என்று "தமிழ்மொழி அகராதி" பொருள் தருகிறது. தெய்வங்களை மகிழ்விப்பதற்காகவே மேற்கொள்ளப்படும் செயல்பாடுகளும், பூசனைமுறைகளுமே வழிபாடு என்றும், இறைவனுடன் இரண்டறக் கலப்பதே வழிபாடு என்றும், உள்ளத்தின் கதவுகளை இறைவனுக்காகத் திறப்பதே வழிபாடு என்றும் கூறப்படுகிறது.

## வழிபாடு தோன்றக் காரணம்

"இயற்கையின் ஆற்றலைக்கண்டுஅஞ்சிய மனிதன், அதன் சீற்றத்திற்கு ஆளாகாமல் இருக்க விரும்பினான். இதனடிப்படையில் வழிபாடுகள் உருவாயின "என்று வழிபாடு தோன்றுவதற்கானக் காரணத்தை நாட்டுப்புறவியல் அறிஞர் சக்திவேல் குறிப்பிடுகிறார்.

## வழக்கொழிந்த இறை வழிபாடுகள்

இன்று இந்திரன் வழிபாடு, வருணன் வழிபாடு, காமன் வழிபாடு, பிரம்மன் வழிபாடு, பலராமன் வழிபாடு, நடுகல் வழிபாடு

ஆகியவை வழக்கொழிந்த இறை வழிபாடுகள் ஆகும்.

### வழிபாட்டில் மாற்றம்

மரவழிபாடு இன்று கோயில் தலவிருட்ச வழிபாடாக மாறிவிட்டது. போர்க்கள தெய்வமான கொற்றவை வழிபாடு இன்று காளி, துர்க்கை வழிபாடாக மாறிவிட்டது.

### 1. இந்திரன் வழிபாடு

தொல்காப்பியத்தில் தொல்காப்பியர் நிலப்பாகுபாடு பற்றிக் கூறும்போது, அந்தந்த நிலத்திற்குரிய தெய்வத்தை வரையறுத்துக் கூறியுள்ளார்.

**"வேந்தன் மேய தீம்புனல் உலகமும்"**
***(தொல்காப்பியம் - பொருள் - நூ 5)***

என்று குறிப்பிட்டுள்ளார். மருத நில தெய்வமாக இந்திரன் குறிப்பிடப் பெறுகிறார்.

இந்திரன் என்றாலே ஆயிரம் கண்களை உடையவன். நூறுவேள்விகளைச் செய்து முடித்த தேவர்களுக்குத் தலைவன். நான்கு தந்தங்களை உடைய ஐராவதம் என்னும் யானையை உடையவன் என்பதனை,

**"நூற்றுப் பத்தடுக்கிய நாட்டத்து நூறுபல்**
**வேள்வி முற்றிய வென்றடு கொற்றத்து**
**ஈரிரண் சேந்திய மருப்பி னெழிலியைத்**
**தாழ் பெருந்தடங்கை யுயர்த்த யானை**
**எருத்தமேறிய திருக்கிளர் செல்வனும்"**
***(திருமுருகாற்றுப்படை 155 -160)***

என்று திருமுருகாற்றுப்படையில் வஜ்ஜிராயுதத்தை ஏந்திய கையை உடையவனாகத் திகழ்கிறான்.

மருத நிலக் கடவுளான இந்திரனைக் குறிக்கும் விதமாக,

**"உண்டாலம்ம இவ்வுலக மிந்திரர் அமிழ்த....."**
***(புறநானூறு 182:1-2)***

என்றும், ஆயிரம் கண்களை உடையவன் என்பதை,

**"அணங்குடைவச்சிரத்தோன் ஆயிரம்கண்"**
***(முல்லைக்கலி 5:16)***

என்றும் கூறுகிறது.

இந்திரன் தேவர்களின் தலைவன் எனப் போற்றப்படுபவன். இவனை வள்ளுவர்,

**ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்புளார் கோமான்**
**இந்திரனேசாலுங்கரி**
***(25வதுகுறள்)***

என்று குறிப்பிட்டுள்ளார்.

சிலப்பதிகாரம், மணிமேகலையில் இந்திரனுக்கு சிறப்பாக 28 நாள்கள் விழா கொண்டாடியதைக் குறிப்பிடுகிறது. புகார் நகரில் பல தெய்வங்களை (சமணம், பௌத்தம், சைவம், சாக்தம், வைணவம், கௌமாரம்) வழிபட்டாலும் இந்திரவிழாமிகச்சிறப்பாகக்கொண்டாடப்பட்டது.

### இந்திரவிழா வரலாறு

தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன் என்னும் சோழ மன்னன் இந்திரனிடம் பூம்புகார் நகரில் உன்னை முன்னிறுத்தி, நாங்கள் எடுக்கும் விழாவில் 28 நாட்கள் வந்திருக்கவேண்டும் என்று வேண்ட, இந்திரனும் அதற்கு இசைந்ததால், இந்திரவிழா எடுக்கப்பட்டது.

நாளங்காடியின் ஒரு புறத்தில் நகரைக் காத்து வரும் பூதம், இந்திரவிழாவை எடுக்காமல் இருந்துவிட்டால், மிகுந்த துன்பத்தை ஏற்படுத்தும் என்பதற்கு ஆண்டுதோறும் இந்திரவிழா எடுக்கப்பெற்றது. காவல் பூதத்துக்கடை முகத்தில் பலியிட்டும், நேர்த்திக் கடன் செலுத்தியும், புகார் நகரத்து மக்கள் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடினர். இந்திரவிழா எடுக்கும் முறையையும், கொடியேற்றும் முறையையும்,

**"ஐவகை மன்றத்து அரும்புலியுறீஇ**
**வச்சிரக்கோட்டத்து மணங்கெழு முரசம்**
**கச்சையானைப்பிடர் தலைஏற்றி"**
***(சிலம்பு - இந்திரவிழா 140-146)***

என்று விளக்குகிறது. கொடியேற்றத்துடன் தொடங்கும் விழா 28 நாட்கள் நடைபெறும்.

28ஆவது நாள் கொடி இறக்கி, நிறைவு விழாவாகக் கொண்டாடி மகிழ்வர். அந்நாளை சிறப்பு பூசைக்குரிய விழா நாளாகக் கருதுவர்.

**"விண்ணுலக வேந்தன் மழைக்கு அதிபதி
விண்ணவர் தலைவனை விழுநீர் ஆட்டிப்"**
***(சிலம்பு 5-168)***

இப்பாடல் ஐம்பெருங்குழுவினரும், எண்பேர் ஆயத்தினரும் விண்ணவர் தலைவன் இந்திரனைக், காவிரி நீரினைக் கொண்டு நீராட்டி, விழா எடுத்து வழிபட்டனர் என்பதைக் குறிப்பிடுகிறது.

**"விண்ணவர் தலைவனை வணங்கி முன்னின்று"**
***(மணிமேகலை 1-5)***

விண்ணவர் தலைவனான இந்திரனை வணங்கி விழா எடுத்தமையை அறியமுடிகிறது.

இவ்வாறு பண்டைய தமிழ் மக்களிடையே இந்திரன் வழிபாட்டு முறை காணப்பட்டாலும், இன்று இவ்வழிபாட்டு முறை மறைந்து போயின. இந்திரனுக்கு தனிகோயில்கள் காணப்படவில்லை.

### 2. வருணன் வழிபாடு

மாரி என்பது மழை எனப் பொருள்படுகிறது. மழைக்கு வருணக்கடவுள் அதிபதி. தொல்காப்பியர் தொல்காப்பியத்தில்

**வருணன் மேய பெருமணல் உலகமும்
(தொல்காப்பியம் - பொருள்நூ 5)**

நெய்தல் நிலத்திற்குரிய தெய்வமாக வருணன் குறிப்பிடப்பெறுகிறார்.

நெய்தல் நில மக்கள் கடலில் மீன்பிடித்தும், உப்புவிளைவித்தும், முத்தும், பவளமும், குளித்தும், நீர் வாணிகம் செய்தும் கடலினாலேயே வாழ்ந்ததால், தம் தெய்வத்தைக் கடல் தெய்வமாகக் கொண்டாடினர்.

***"சின்னச் சுறவின் கோடு நாட்டு
மனைச்சேர்த்திய வல்லணங்கினான்
மடற்றாழை மலர் மலைந்தும்
பிணர்ப் பெண்ணைப் பிழி மாற்றியும்
புன்றலை யாரும் பரதவர்........."***
***(பட்டினப்பாலை 86-92)***

என்பதை பட்டினப்பாலை கூறுகிறது.

இப்பாடல் வருணன் வழிபாட்டைச் சுட்டிக்காட்டுகிறது. நெய்தல் நிலமக்கள் வருணனை தெய்வமாக விழா எடுத்து வழிபட்டனர்.

நெய்தல் நிலத்து மக்கள் முழுநிலா நாளில் மீன்பிடிக்கச் செல்லும் போது, தெய்வத்தை வணங்கிவந்தனர். சின்னச் சுறாவின் கொம்பினை மணலில் நட்டு, அதனுள் தெய்வம் ஏறியதாக நம்பி வழிபட்டனர்.

இன்று தமிழ் மக்களிடம் வருணன் வழிபாடு இல்லை. ஆனால் மீனவ மக்கள் கடலை வழிபடுகின்றனர். வருணனுக்குத் தனியாகக் கோயில்கள் தமிழ்நாட்டில் இல்லை.

### 3. காமன் வழிபாடு

சங்க கால மக்கள் காமனையும், தெய்வங்களுள் ஒன்றாக வைத்து வழிபட்டு வந்தனர். காமன் மாயோனின் மகனாகக் கருதப்படுகிறான். உயிர்களுக்குக் காமத்தை உண்டாக்கும் தெய்வமென்று புராணங்கள் கூறுகின்றன.

தனக்குச் சிறந்த கணவனைத் தரவேண்டும் என்றும், தன் கணவன் தன்னை விட்டுப் பிரியாமல் இருக்கவேண்டும் என்றும் பெண்கள் காமனை வழிபடுவார்கள்

காமதேவனுக்கு "அனங்கன்' என்ற பெயரும் உண்டு. அங்கம் (உடல்) இல்லாதவன் என்று பெயர் காமனின் கொடி மீன் கொடி. மன்மதன் கணை மலர்க் கணை. (ஐவகை மலர்கள், தாமரை, அசோகம், மாம்பூ, முல்லை, நீலோத்பவ மலர்).

**ரிக் வேதத்தில் காமன்**

ரிக் வேதத்தில் "காமனே ஆன்மாவின் முதல் பிறப்பு" என்றும், ஒவ்வொரு உயிரின் பெருக்கத்துக்கும் அடிப்படையான காதல் தேவனான காமன் ஒரு சிறந்த கடவுளாக, உயிர்ப்படைப்புக்குரியவன் என்றும் போற்றப்படுகிறான். சாமவேதத்திலும் காமதேவனைப் பற்றியக் குறிப்புகள் காணப்படுகின்றன.

**வில்லவன் விழவினுள் விளையாடும் பொழுதன்றோ**

**(கலித்தொகை. 35:4)**

நீர்நிறைந்த ஆற்றின் கரையில் குடி கொண்டிருக்கும் மன்மதனுக்கு பரத்தையர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து விழா எடுக்கின்றனர். அவ்விழாவில் தலைவனும் கலந்துகொண்டு தன்னுடன் உறவாட வேண்டும் என்று எண்ணுகிறார்கள்.

**விழா வினுள் விறல் இழையவரோடு விளையாடுவான் மன்னோ.**

**(கலித்தொகை 30:13).**

காமனுக்கு எடுத்த விழாவில் தலைவன் பரத்தையருடன் விளையாடியதை நினைத்து தலைவி வருத்தம் அடைகின்றாள்.

காமனுக்கு விழா எடுத்துக் காதலைக் கொண்டாடினர். பின்பனிக்காலத்தில் மாசித் திங்கள் தொடங்கி, இளவேனிற் காலத்தின் தொடக்கமான பங்குனித் திங்கள் வரை 28 நாட்கள் காதற் பெருவிழாவானது சங்க காலத்தில் நடைபெற்றுள்ளது. இதனை,

**"குழவிவேனில் விழவு எதிர்கொள்ளும் சீரார் செவ்வியும் வந்தன்று"**

**(பாலைக்கலி 35: 9-10)**

**"காமர் கடுந்திண்தேர்ப் பொருப்பன்"**

**(மேலது 341-24)**

எனவும், எங்கும் மணம் நிறைந்த வண்ண வண்ணப் பூக்கள் அரும்பிப் பூமியை, மலர்ச் சோலையாக மாற்றுகின்ற காலம் இது என்பதால், இதனையே காமன்விழாக் கொண்டாடுவதற்குரிய ஏற்றக் காலமாக அக்கால மக்கள் தேர்வு செய்துள்ளனர்.

மேலும் முன்பனி, பின்பனிக் காலங்களில் பணிமேற் சென்றவர்கள், இளவேனிற் காலத்தில் தான் பணியை முடித்துத் திரும்பும் வழக்கம் கொண்டிருந்தனர். எனவே இக்காலமே காமனுக்கு விழா எடுக்க ஏற்றக் காலமாக இருந்தது.

காமன்விழா என்பது தலைவனும், தலைவியும் இன்பமாக பொழுதுபோக்கும் இன்பமான விழாவாகும். காமன் விழாவின் போது, காதலர்கள் மகிழ்ந்துஉலாவி களிக் கூர்ந்து விளையாடும் இயல்பினராய் திகழ்வர். இச்சமயம் தலைவன் அல்லது கணவன் அருகில் இல்லாத தலைவிக்கு இவ்விழாவானது பெருந்துயரைத் தரும் எனவும், அதனை உணர்ந்தே தலைவன் ஊரிலே காமவேளுக்கு விழா நிகழும்போது, தான் இல்லாததை உணர்ந்த தலைவி வருந்துவாள் என்பதை உணர்ந்து, தேர் ஏறி விரைவில் வீடு திரும்புவதாகக் கலித்தொகை பாடல் ஒன்று கூறுகிறது.

காமனை இளங்கோவடிகள் காதல் தெய்வமாகவேக் காட்டுகிறார். "நெடுவேள், காமக்கடவுள், மாரன் கலையிலாளன், உருவிலாளன், ஆகியப் பெயர்களால் அழைக்கிறார். பெயருக்குத் தக்கபடி சிலப்பதிகாரத்தில் காமனின் உருவம் எங்கும் கூறப்படவில்லை. வேனிற்காலமான பங்குனி மாதத்தில் காமனுக்கு மதுரையில் விழா எடுக்கப்பட்டதை சிலம்பு

**"வெங்கண் நெடுவேல் வில் விழாக்காணும் பங்குனி முயக்கத்தில் பனிஅரசு பாண்டுளன்"**

**(சிலம்பு- ஊர்காண்காதை111-112)**

என்று கூறுகிறது.

மோர் விற்கும் ஆயர் மகள் காமன் கோவிலில் படைப்பதற்காக அங்கு சென்றாள். அக்கோவிலிலுள்ள மன்மதனும் இவள் அழகில் மயங்கித் தன் மலரம்புகளை கீழேப் போட்டு விடுவான் என்ற செய்தியைக் கலித்தொகை

**"படையிடுவான் மன்கண்டீர் காமன் மடையரும்**
**காலொடு கோட்டம்புகில்"**

***(கலித்தொகை முல்லைக் கலி 109)***

என்று கூறுகிறது.

**உதயணன் கதையில் காமதேவன் வழிபாடு**

பதுமாவதி வருகையில் உதயணன் முதலியோர் இராசகிரிய நகரத்தில் இருந்து வருகையில் இராசகிரி நகரத்தார் காமதேவனுக்கு விழாக் கொண்டாடும் நன்னாள். காமன் கோவிலில் நடைபெறும் இந்த விழா ஏழு நாட்கள் தொடர்ந்து நடைபெறும். இராசகிரிய நகரத்து தெருக்கள் தோறும் புதுமணல் பரப்பி விழாக்கொடிகளை ஏற்றினர். மகத அரசனுடைய தங்கை பதுமாவதி ஏழு நாட்களும் காமதேவன் கோட்டத்திற்குச் சென்று வழிபாடுகள் நடத்தியதாகக் கூறப்பட்டுள்ளது.

**நாச்சியார் திருமொழியில் வழிபாடு**

நாச்சியார் திருமொழியில் ஆண்டாள் கண்ணனைத் தவிர வேறு தெய்வத்தை வணங்காதவள். "வழியல்லா வழியே முயற்சி செய்தாகிலும், கண்ணபிரானோடு கலக்கப் பெறவேணும்" என்ற அளவற்ற ஆசையில் மன்மதனை வழிபடுகிறாள். வழிபடும் இடத்தையும், வீதியையும், புதுநொய் மணலால் அலங்கரிக்கின்றாள். விடியலில் நீராடி, சுள்ளிகளால் எரிமூட்டி நோன்பு நோற்றாள். அம்புகளில் கண்ணன் பெயர் எழுதி ஊமத்தம் பூவாலும், முருங்கை மலராலும் அர்ச்சித்தாள். நெல்லும், கரும்பும், வெல்லமும், பச்சரிசியும், அவலும் கொண்டு சீராக்கிச் சமைத்துப் படைத்து, தூமலர் தூவி வழிபடுகின்றாள். பாற்கடல் வண்ணனுக்குப் பழுதின்றிப் பணிசெய்து வாழ, அவனோடு தன்னைக் கூட்டுவிக்கும் படி வேண்டுகிறாள்.

***"அவரைப் பிராயம் தொடங்கி என்றும்***
***ஆதரித்து எழுந்த என்தட முலைகள்***
***துவரைப் பிரானுக்கே சங்கற்பித்துத்***
***தொழுது வைத்தேன் ஏல்லை***
***விதிக்கிற்றியே"***

***(நாச்சியார் திருமொழி - தையொருதிங்கள் 4)***

என்பதை மேற்கண்ட பாடலடி மூலம் அறியமுடிகிறது.

திருமணம் ஆனவர்கள் காமதேவனை வழிபடுவதில்லை. தன் கணவரையே தெய்வமாக எண்ணி வழிபடுவர் என்பதை கண்ணகி,

***"சோம குண்டம் சூரிய குண்டம் துறை மூழ்கிக்***
***காமவேள் கோட்டம் தொழுதார் கணவரொடு"***

***(சிலம்பு 9, 59-60)***

எனக் கூறுகின்றாள்.

இன்று காமன் வழிபாடு நடைபெறுவதில்லை.

**4. பலராமர் வழிபாடு**

பலராமனை பண்டைய மக்கள் வழிபட்டு வந்ததை சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. பலராமன் கண்ணனுடைய அண்ணன் என்பதால், கண்ணனுடைய கதைகளுடன், பலராமனுடைய கதைகளும் சேர்ந்துவிடுகின்றன.

நற்றிணை 38. முதல் இரண்டுவரிகள் பலராமனையும், கண்ணனையும் உவமை வாயிலாகக் கூறுகிறது.

***"மாயோன் அன்னமால் வரைக்கவா அன்.***
***வாலியோன் அன்னவயங்கு வெள்அருவி".***

***நற்றிணை (32:1-2)***

நீலமலை விழுகின்ற அருவியின் நிறம் வெண்மை. நீலநிறம் போன்ற மலை என்பதால் "மாயோன் அன்ன மால் வலை" என்றும், வெண்மை நிறமுடைய அருவியை வாலியோனன், வயங்கு வெள்ளருவி என்றும் கூறுகிறது.

திருமாலும், பலராமனும் அடுத்தடுத்து இடம்பெறுகின்றனர். இதனை சங்க இலக்கியங்கள் கிருஷ்ணனும், பலராமனும் வழிபடு தெய்வமாக இருந்ததைக் குறிப்பிடுகின்றன. பலராமரை வலிமைக்கு உதாரணமாகக் காட்டுகின்றனர்.

பலராமனை வெண்மை நிறமுடையவன் என்றும்."வாலியோன். என்றும் அழைத்தனர். கடலில் தோன்றிய சங்கு போன்று வெண்மை நிறமுடையவன் வாலியோன் என்பது பொருள். பனைக்கொடி பால்நிறவண்ணன், (முல்லைக்கலி-4). பால் வண்ணமேனியன் (நெய்தற்கலி-7). வால்வளைமேனி வாலியோன் (சிலம்பு இந்திரவிழா வூரெடுத்த காதை)

பலராமனின் அவதாரத்திருநாள் சித்திரை மாதம் வளர்பிறை அட்சய திருதியை ஆகும். இவருடைய கொடி பனைக்கொடி. ஆயுதம் நாஞ்சில். இவருக்கு ரேவதி, வாருணி என்ற இரண்டு மனைவிகள் உண்டு. அலாயுதன், அச்சுதன், நீலாம்பரன், குண்டலன், முன்னோன், வெள்ளையன், பனந்துசன், பலதேவன் என்று பல பெயர்களை உடையவன் என்று பிங்கலந்தை நிகண்டு கூறுகிறது.

சங்க இலக்கியங்களில் பல இடங்களிலும் கண்ணன் முன்னவன் என்றே அழைக்கப்படுகிறான். மணிமேகலையில் சிறைக்கோட்டம், அறக்கோட்டம் ஆக்கிய காதையில் பலராமன் வழிபாடு கூறப்பட்டுள்ளது. "பாசிலை செறிந்த பைங்காற் கழையொடு வால் வீச் செறிந்த மரா அங்கண்டு நெடியோன் முன்னனோடு நின்றனன் ஆமெனத். தொடிசேர் சிங்கையில். தொழுது நின்றேத்தியும்". என்னும் பகுதியில் பச்சை மூங்கில் கண்ணனையும், மராமரம் வெண்மை நிறம் பலராமனையும் தோன்றக் கண்டு மன்னன் வணங்குவதாகப் பாடியுள்ளார்.

சங்க காலத்தில் பலராமன் வழிபாடு சிறந்து விளங்கியது.இந்துக்கள் ஒவ்வொரு தெய்வத்திற்கும் மரத்தை ஒதுக்கியிருந்தனர். கலித்தொகையில் மரங்கள் பூத்து நிற்றலுக்குத் தெய்வங்கள் உவமையாகக் கூறப்பட்டுள்ளது. வெண்கடம்பு - பலதேவன் இது தெய்வங்களின் நிறத்தின் தன்மையைக் குறிப்பிடுகின்றன.

திருமாலின் கிருஷ்ண அவதாரத்தில், கலப்பையை ஏந்தி அவரது தமையனாக செய்த அவதாரமே பலராமர் அவதாரமாகும். பரிபாடல்,

**"நிறன் உழும் வளைவாய் நாஞ்சிலோனும்"**

***(பரிபாடல் 13)***

என்று கலப்பைப் படை ஏந்திப் பகைவர்களை வென்று, கொன்ற நிலையில் திருமால் பலராமனாக அவதாரம் செய்தார் என்பதை

**"சேய்உயர் பணை மிசை எழில் வேழம் ஏந்திய
வாய்வாங்கும் வளை நாஞ்சில் ஒருகுழை
ஒருவனை"**

***(பரிபாடல் 1)***

என்ற பாடலடி மூலம் அறியமுடிகிறது.

பலதேவர் அவதாரத்தில் வெண்சங்கு போன்ற வண்ணத்துடன், யானைக் கொடி ஏந்தி, கலப்பைப் படைக்கொண்டு, ஒற்றைக் காதணி அணிந்தவனாகக் காணப்படுகிறான்.

**"மாயவன் என்றாள் குரலை விறல்வெள்ளை"**

***(சிலம்பு - ஆய்ச்சி 14)***

**"மாயவன் தம் முன்னினொடும் வரிவளைக்கைப்
பிள்ளையொடும்"**

***(சிலம்பு - ஆய்ச்சி28)***

**"மதிபுரையும் நறுமேனித்தம் முன்னோன்
வலத்துளாள்"**

***(சிலம்பு - ஆய்ச்சி 27)***

என்று சிலம்பு பதிவு செய்கிறது

இன்று பலராமருக்கு என தமிழ்நாட்டில் தனிக்கோயில்கள் இல்லை.

### 5. பிரம்மன் வழிபாடு

பிரம்மன் வழிபாடு குறித்து சங்க இலக்கியங்களில் குறிப்பு காணப்படுகிறது. உலகினைப் படைக்க எண்ணிய பிரம்மன் ஆதிகாலத்தில் பரந்துவிரிந்த கடலை உருவாக்கினான் என்று முல்லைக் கலி பேசுகிறது.

**"படைத்தோன் மன்றவப் பண்பிலாளன்"**

**(புறநானூறு 194)**

என்று புறநானூறு கூறுகிறது.

இளங்கோவடிகள் சிலம்பில் பிரம்மனை, வேத முதல்வன், மறை முதல்வன், மாமுது முதல்வன், ஆகிய பெயர்களால் சுட்டுகிறார். பிரம்மனே நான்கு வேதங்களை ஓதியவன் என்பது புலனாகிறது.

**தொடங்கற் கண் தோன்றிய முதியவன் முதலாக"**

**(கலித்தொகை- பாலைக்கலி-2:1)**

என்னும் பாடலடி உலகைப் படைத்தவன் பிரம்மன் என்பதைக் காட்டுகிறது. இன்று பிரம்மனுக்கு என தமிழ்நாட்டில் தனிக் கோயில்கள்இல்லை.

### 6. நடுகல் வழிபாடு

பண்டையத் தமிழ் மக்களின் வழிபாடு களில் மிகவும் குறிப்பிடத்தக்கது நடுகல் வழிபாடாகும். போரில் இறந்த வீரர்களுக்கு அவர்களின் நினைவினைப் போற்றும் வகையில் வழிபடுவதாகும். மக்கள் அனைவரும் வழிபட்டனர். அன்று நடுகல் வழிபாட்டைக் காட்டிலும் சிறந்த வழிபாடு இல்லை என்று குறிப்பிட்டனர்.

சங்க இலக்கியங்களும், தொல்காப்பியமும் நடுகல் வழிபாடு பற்றிக் கூறியுள்ளன. போர்க்களத்தில் மறப்போர் செய்து வீழ்ந்து பட்ட வீரர்களுக்கு, நடுகல் நட்டி வழிபாடு சங்க காலத்தில் செய்துள்ளனர் என்பதை தொல்காப்பியம்,

**"காட்சி கால் கோல், நீர்படை நடுகல்**
**சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்தலென்று**
**இருமூன்று வகையிற் கல்லொடுபுணர"**

**(தொல்காப்பியம் - பொருள் 5)**

என்ற நூற்பாவில் நடுகல்லுக்கு உரியனவாகக் காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல், பெரும்படை, வாழ்த்தல் என்ற ஆறு துறைகளைக் கூறும். எனவே போரில் நெஞ்சில் விழுப்புண்பட்டு இறந்த வீரனுக்கும், புகழோடு ஆட்சி செலுத்தி மறைந்த மன்னனுக்கும், நடுகல் நட்டு வழிபட்டது 'நடுகல்வழிபாடு" எனப்பட்டது. பண்டைய தமிழர்களிடம் நடுகல் வழிபாடு பெரிதும் காணப்பட்டது.

நடுகல்லை வழிபடுவது அல்லாது, பிற கடவுள் இருந்தாலும், அதை வழிபடும் முறை தமக்கு இல்லை என்று ஒருமறக் குடிமகள் கூறுவதைப் புறப்பாடல் காட்டுகிறது.

**"ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி**
**ஒளிறு எந்து மருப்பின் களிறு எறிந்து வீழ்ந்தெனக்**
**கல்லேபாவின் அல்லது**
**நெல்லு குத்துப்பாவும் கடவுளும் இலவே"**

**(புறநானூறு 335)**

சங்ககால மக்கள் நடுகல்லான வீரதெய்வங்களையே வணங்கினர். பிறபுலத்தில் இருந்து வந்த கடவுளை ஏற்காத மனநிலையை இந்தப் பாடல் காட்டுகிறது. வீரத்துடன் வாழ்ந்து சென்ற தம் முன்னோர்களையே கடவுளாக வழிபட்டுள்ளார்கள் என்பதை அறிய முடிகிறது.

### துணை நூற்பட்டியல்

1. இளம்பூரணர் உரை. (1953). *தொல்காப்பியம் - பொருளதிகாரம்.* சென்னை, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்.
2. கமலக் கண்ணன் இர்.வ. (2001). *நாலாயிர திவ்வியப் பிரபந்தம் மூலமும் விளக்கவுரையும்,* தொகுதி 1,2. சென்னை, வர்த்தமானன் பதிப்பகம்.

3. சுப்பிரமணியன். பெ. (உரை.ஆ) தட்சிணாமூர்த்தி. அ. (2004). சென்னை, பரிபாடல் மூலமும் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பிரைவேட்) லிமிடேட்.
4. நாகராசன். வி. (உரை.ஆ). (2004). பத்துப்பாட்டு மூலமும் உரையும், முதல், இரண்டு தொகுதி. சென்னை, நியூ செஞ்சுரி செஞ்சுரி புக் ஹவுஸ் (பிரைவேட்) லிமிடேட்.
5. பாலசுப்பிரமணியன். கு. வை (உரை.ஆ). (2004). நற்றிணை மூலமும் உரையும், சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பிரைவேட்) லிமிடேட்.
6. பாலசுப்பிரமணியன். கு. வை (உரை.ஆ) (2004). சென்னை, புறநானூறு மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பிரைவேட்) லிமிடேட்.
7. பெருங்கதை. (1963). திருநெல்வேலி, சென்னை, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
8. விசுவநாதன். அ. (உரை.ஆ). (2004). கலித்தொகை மூலமும் உரையும், சென்னை நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பிரைவேட்) லிமிடெட்.
9. ஸ்ரீ.சந்திரன். ஜெ. (2012). சிலப்பதிகாரம் மூலமும் தெளிவுரையும், சென்னை, தமிழ் நிலையம்.
10. ஸ்ரீசந்திரன். ஜெ. (2007). பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் தொகுதி 1,2,3, சென்னை. தமிழ் நிலையம்.
11. ஸ்ரீ.சந்திரன். ஜெ. (2012). மணிமேகலை மூலமும் தெளிவுரையும், சென்னை, தமிழ் நிலையம்.